museum of modern
and contemporary art
sri lanka

PRESS RELEASE

2022 **ஜூலை**

# Nations Trust வங்கி MMCA இலங்கையுடன் முக்கிய தாளாளராக இணைகிறது

நவீன மற்றும் சமகாலக் கலைக்கான இலங்கை அருங்காட்சியகம் (MMCA Sri Lanka) Nations Trust வங்கியுடன் (NTB) புதிய உறவை தொடங்கியுள்ளதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். 2022 முதல் 2025 வரையான மூன்று வருட காலப்பகுதியிற்கு இவ் வங்கி அருங்காட்சியகத்தின் முக்கிய தாளாளராகவிருக்கும்.

இப் புதிய பங்குரிமையை பற்றி ஷர்மினி பெரெய்ரா, தலைமை எடுத்தாளுனர், MMCA இலங்கை கூறுகையில், "MMCA அருங்காட்சியகத்தின் சார்பாக NTBயின் மூன்று வருட நிதியுதவிக்கு மிகுந்த நன்றியை தெரிவிக்கின்றேன். அவர்களின் நிதியுதவி MMCA இலங்கை அருங்காட்சியகத்தை மென்மேலும் வளர்ச்சியடைய உதவுகின்றது. அருங்காட்சியகத்தை மேம்படுத்துவதில் முக்கிய அங்கமாக புதிய தலைமுறை இளைஞர் யுவதிகளுக்கு அருங்காட்சியகத்தில் பணிபுரியும் வாய்ப்பையும் உருவாக்குகின்றோம். இளம் தலைமுறையின் முக்கிய குறிக்கோளான மாற்றம், சௌபாக்கியம் மற்றும் புதிய வேலை வாய்ப்புகளை அளிப்பதற்கு இவ் அருங்காட்சியகம் நவீன மற்றும் சம கால கலைகளினூடாக கதை கூறுவதை மையமாகக் கொண்டு கண்காட்சி-வடிவமைப்பு, பொது நிகழ்ச்சிகள் மற்றும் இணைய வழி ஊடாட்டங்களை அளிக்கின்றது." MMCA இலங்கை அருங்காட்சியகம் இலங்கையில் அருங்காட்சியகத்தினூடாக கற்றல் மற்றும் ஊடாட்டத்தை கட்டமைக்க முயல்கின்றது. கண்காட்சி மற்றும் கால் நிகழ்ச்சிகள் மாத்திரமல்லாது மூன்று மொழிகளிலும் இயங்கும் இலங்கையின் முதலாவது பொது மக்களுக்கான கலாச்சார முன்னெடுப்பாகும்.

Groundfloor, Crescat Boulevard
89 Galle Road
Colombo 03

Registered Address:
117 Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02
Sri Lanka

info@mmca-srilanka.org
www.mmca-srilanka.org

இப் பங்குரிமையை பற்றி Nations Trust வங்கியின் சிரேஷ்ட சந்தைப்படுத்தல் அதிகாரி சஞ்சய செனரத், ”இலங்கையில் கலை கலாசார விடயங்களை MMCA இலங்கையூடாக ஊக்குவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். இவ் அருங்காட்சியகம் இலங்கையைச் சார்ந்த நவீன மற்றும் சமகால கலைஞர்களின் படைப்புகளை புதிய விதத்தில் காட்சிப்படுத்துவதில் முன்னோடியாக திகழ்கின்றது. எமது நிறுவன சமூக பொறுப்புகளை நிறைவேற்றி சமூகத்திற்கு நற் செயல்களை கொடுப்பது எமது கடமையாகும். ”அடுத்த தலைமுறையை சக்திப்படுத்துவோம்” எனும் அடிப்படையில் இவ் அருங்காட்சியகத்தை மேம்படுத்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.”

கடந்த 22 வருடங்களில், Nations Trust வங்கியானது பல்வேறு கலை-சார் நடவடிக்கைகளை நாடு முழுவதும் முன்னெடுத்து தனியார் நிறுவனங்கள் எவ்வாறு பங்களிக்க வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக உள்ளது. வங்கியானது நீடிக்கக்கூடிய எதிர்காலத்திற்காக இப் புதிய முயற்சியை எடுத்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் நீடிக்கக்கூடிய அபிவிருத்தி குறிக்கோள்களில் ஒன்றான தரமான கல்வி வழங்குதல், வங்கியின் முக்கிய தனியார் நிறுவன சமூக பொறுப்புகளில் ஒன்றாகும். இக் கூட்டமைப்பானது, நாட்டின் அடுத்த தலைமுறையின் அறிவு விருத்திக்கும், நவீன மற்றும் சமகால கலைத்துறையில் நிபுணர்களை உருவாக்குவற்கு வழிவகுக்கும்.

Nations Trust வங்கியின் தனியார் வங்கி வாடிக்கையாளர்களின் நிதித் தேவைகளுக்கான தீர்வுகளை வழங்குகின்றது. செல்வ மேலாண்மை, வாழ்க்கைமுறை, அடுத்த தலைமுறை எனும் மூன்று முக்கிய பிரிவுகளை கருத்திற் கொண்டு வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் தேவைக்கேற்ப சேவைகளை வழங்குகின்றது. ஒவ்வொரு பொருளும் சேவையும் பல்வேறு நன்மைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதுனூடக அவர்களுக்கு ”காலத்தை தாண்டிய மரபை” உருவாக்க வழிவகுக்கின்றோம்.
ஆக்கபூர்வமான முதலீடுகளுக்கு கலை ஆலோசனை சேவையை நாடுங்கள் [https://www.nationstrust.com/personal/exclusive-memberships/private-banking](https://www.nationstrust.com/personal/exclusive-memberships/private-banking).

இலங்கை MMCA கிரெஸ்கட் பூல்வார்ட், கொழும்பு 3ல் அமைந்துள்ளது. தினமும் மு.ப. 10 முதல் பி.ப. 6 வரையும், வெள்ளிக்கிழமைகளில் பி.ப. 8வரை திறந்திருக்கும். அருங்காட்சியகத்தில் நடைபெறும் அனைத்து பொது நிகழ்ச்சிகளும் இலவசமாகும். 'சந்திப்புகள்' கண்காட்சி Asian Hotels மற்றும் Properties PLC, ஐரோப்பிய ஒன்றியம், கலை முன்னெடுப்புகளுக்கான ஸ்தாபனம் மற்றும் John Keells ஸ்தாபகம். மேலதிக தகவல்களுக்கு, www.mmca-srilanka.org அல்லது www.facebook.com/mmcasrilanka மற்றும் Instagram www.instagram.com/mmcasrilanka/ நாடுங்கள்.